# JSR IAS ACADEMY

# பொது தமிழ்

## 7ம் வகுப்பு புதிய புத்தகம்

## இயல் 1

# எங்கள் தமிழ்

*"அருள்நெறி அறிவைத் தரலாகும்*
*அதுவே தமிழன் குரலாகும*
*------- -------- --------*
*அன்பும் அறமும் ஊக்கவிடும்*
*அச்சம் என்பதை போக்கிவிடும்".*



- உலக மொழிகளில் தொன்மையானது - தமிழ் மொழி.
- மென்மையும், இனிமையும், வளமையும் உடைய மொழி - தமிழ்.
- வாழ்விற்கு தேவையான அன்பையும், அறத்தையும் கூறுவது - தமிழ் .
- கொல்லாமையை குறிக்கோளாகவும் பொய்யாமையை கொள்கையாகவும் கொண்டு எல்லா மனிதர்களும் இன்புற்று வாழ உதவுவதாக நாமக்கல் கவிஞர் கூறுவது அன்பு, அறம்.
- ஆசிரியர் - வெ. ராமலிங்கனார்.
- சிறப்பு பெயர் - நாமக்கல் கவிஞர்.
- இவர் தமிழறிஞர், கவிஞர், விடுதலைப் போராட்ட வீரர் என பன்முகத் தன்மை கொண்டவர்.
- காந்தியக் கொள்கையால் ஈர்க்கப்பட்டதால் காந்தியக் கவிஞர் என்று அழைக்கப்படுகிறார்.
- தமிழகத்தின் முதல் அரசவைக் கவிஞர்.
- இவர் சுயசரிதை - என் கதை.
- <u>படைப்புகள்</u>:
    - மலைக்கள்ளன்
    - நாமக்கல் கவிஞர் பாடல்கள்
    - என் கதை
    - சங்கொலி
- இப்பாடல் நாமக்கல் கவிஞர் பாடல்கள் எனும் நூலில் இருந்து எடுக்கப்பட்டது.

JSR IAS ACADEMY

- *கத்தி யின்றி ரத்த மின்றி யுத்த மொன்று வருகிறது*
  *சத்தியத்தின் நித்தியத்தை நம்பும் யாரும் சேருவீர்*
  - நாமக்கல் கவிஞர்
- சொல்லும் பொருளும்:
  - ஊக்கி விடும் - ஊக்கப்படுத்தும்
  - குறி - குறிக்கோள்
  - விரதம் - நோன்பு
  - பொழிகிற - தருகின்ற
  - நெறி - வழி

## ஒன்றல்ல இரண்டல்ல

*ஒன்றல்ல இரண்டல்ல தம்பி சொல்ல*
*ஒப்புமை இல்லாத அற்புதம் தமிழ்நாட்டில்*



- ஆசிரியர் - உடுமலை நாராயண கவி
- சிறப்பு பெயர் - பகுத்தறிவு கவிராயர்
- இவர் தமிழ் திரைப்பட பாடல் ஆசிரியராகவும் நாடக எழுத்தாளராகவும் புகழ்பெற்றவர்.
- தமது பாடல்கள் மூலம் பகுத்தறிவு கருத்தை பரப்பியவர்.
- நாட்டுப்புற இசையின் எளிமையைக் கையாண்டு கவிதைகள் எழுதியவர்.
- ஒப்புமை - இணை
- முகில் - மேகம்
- உபகாரி - வள்ளல்

# பேச்சு மொழியும் எழுத்து மொழியும்

- தமிழ்மொழி பழமையும், புதுமையும் நிறைந்த சிறந்த மொழி.
- தமது எண்ணங்களையும் உணர்ச்சிகளையும் பிறருக்கு வெளிப்படுத்துவதற்காக மனிதனால் உருவாக்கப்பட்டது - மொழி.
- மனிதர்களின் சிந்தனை ஒரு தலைமுறையிலிருந்து அடுத்த தலைமுறைக்கு கொண்டு செல்வது - மொழி.
- மொழிகளின் தோற்றத்திற்கு அடிப்படை - ஒலிக் குறியீடுகள்.
- வாயினால் பேசப்பட்டும் பிறரால் கேட்டு உணரப்படுவது - பேச்சு மொழி.
- மொழியின் முதல் நிலை - பேசுவதும் கேட்பதும்.
- கண்ணால் கண்டு உணருமாறு வரிவடிவமாக எழுதப்பட்டு படிக்கப்படுவது - எழுத்து மொழி.
- மொழியின் இரண்டாம் நிலை - எழுதப்படுவதும் படிக்கப்படுவதும்.
- மனிதர்களின் சிந்தனைகள் காலம் கடந்து வாழ்வதற்கு எழுத்து மொழியே காரணம்.

## பேச்சுமொழி:

- மொழியின் உயிர்நாடியாக விளங்குவது - பேச்சுமொழி.
- சொல்லை ஒலிப்பதில் ஏற்படும் ஏற்ற இறக்கத்தால் பொருள் வேறுபடும் என்று கூறும் - நன்னூல்.

*எடுத்தல் படுத்தல் நலிதழ் உழப்பில்*
*திரிப்பும் தத்தமில் சிறிது உளவாகும்* - நன்னூல்

> பேசப்படுவதும், கேட்கப்படுவதுமே உண்மையான மொழி; எழுதப்படுவதும் படிக்கப்படுவதும் அடுத்த நிலையில் வைத்து கருதப்படும் மொழியாகும். இவையே அன்றி வேறுவகை மொழிநிலை உண்டு. எண்ணப்படுவது, நினைக்கப் படுவது, கனவு காணப்படுவது ஆகியவையும் மொழியே ஆகும்
>
> - மு. வரதராசனார்

- இடத்திற்கு இடம் (ம) மனிதர்கள் வாழ்வியல் சூழலுக்கு ஏற்ப மாறுபடும் ஒரே மொழியின் வெவ்வேறு வடிவங்கள் - வட்டார மொழி.

- வாழும் இடத்தின் நில அமைப்பு, இயற்கை திசைகள் காரணமாக பேச்சு மொழி சிறிது சிறிதாக மாற்றங்கள் ஏற்படும் உருவாகும் புதிய மொழி - கிளை மொழி .
- கன்னடம், தெலுங்கு, மலையாளம் போன்ற திராவிட மொழிகள் தமிழிலிருந்து பிரிந்து வருவான கிளைமொழிகளாகும்.

## பேச்சுமொழி:

- பேச்சு மொழிக்கு நாம் தந்த வரிவடிவம் - எழுத்து மொழி.
- ஒரு மொழி நீண்ட காலம் நிலை பெறுவதற்கு இன்றியமையாதது - எழுத்து வடிவம்.
- பேச்சு மொழியை உலக வழக்கு என்றும் எழுத்து மொழியை இலக்கிய வழக்கு என்றும் கூறுவர்.
- பேச்சு மொழியில் உணர்ச்சி கூறுகள் அதிகமாகவும் எழுத்து மொழியில் உணர்ச்சி கூறுகள் குறைவாகவும் இருக்கும்.
- பேச்சு மொழியில் உடல் மொழியும் குரல் ஏற்றத்தாழ்வு இணைப்பதால் அஃது எழுத்து மொழியை விட எளிதாக கருத்தை உணர்த்தும்.
- கேட்டல் (ம) பேசுதல் ஆகியவை முதல் நிலையில் குழந்தைகளுக்கு அறிமுகமாவது - தாய்மொழி.
- படித்தல் (ம) எழுதுதல் ஆகிய இரண்டாம் நிலையில் அறிமுகமாவது - பிற மொழிகள்.
- ஒரு மொழி உயிர்ப்போடு வாழ்வதற்கு பேச்சு மொழியும், காலம் கடந்து வாழ்வதற்கு எழுத்து மொழியும் தேவை.
- தமிழில் பேச்சு மொழிக்கும் எழுத்து மொழிக்கும் இடையே வேறுபாடு இருப்பதால் தமிழை - இரட்டை வழக்கு மொழி என்பர்.
- இம்மொழி வேறுபாட்டை உலக வழக்கு, செய்யுள் வழக்கு என கூறியவர் - தொல்காப்பியர்.

*எளிய நடையில் தமிழ் நூல் எழுதிடவும் வேண்டும்*
*இலக்கணநூல் புதிதாக இயற்றுதலும் வேண்டும்*
*செந்தமிழே செந்தமிழாய் செய்வதும் வேண்டும்*

- பாரதிதாசன்

- இக்காலத்தில் புதிய அறிவியல் கண்டுபிடிப்புகள் மூலம் சான்றோர்களின் உரைகள் ஒலிப்பதிவு மற்றும் ஒளிப்பதிவு செய்யப்பட்டுகின்றன. இதன் மூலம் பேச்சு மொழியும் நீண்ட காலம் நிலைத்து நிற்கும்.

# சொலவடைகள்

- சொலவடை என்பதன் வேறு பெயர் - பழமொழி (முதுமொழி).
- சிறு சிறு தொடர்களாக வட்டார பேச்சு வழக்கில் வழங்கி வரும் சொற்கள் - சொலவடை.
- பேச்சு மொழியின் அழகியலையும் - பண்பாட்டுக் கூறுகளையும் கொண்டிருப்பவை - சொலவடைகள்.
- பொருளட்செறிவு மிக்க சொலவடைகளை நட்புற மக்கள் இயல்பாக தம் பேச்சில் பயன்படுத்துகின்றனர்.

**எடுத்துக்காட்டு:**

- புண்ணுக்கு மருந்து போட முடியும் பிடிவாதத்துக்கு மருந்து போட முடியுமா?
- அணை உடைந்து போன வெள்ளம் அழுதாலும் வராது.
- வெளைச்சலுக்கும் வெள்ளாட்டுக்கும் சென்மப்பகை.
- எறும்பு ஊரக் கல்லும் தேயும்.
- உழைக்கிற மாடுதான் ஊருக்குள்ள விலைபோகும்.
- அடை மழை விட்டாலும் செடி மழை விடாது.
- நினைச்சதாம் கழுதை எடுத்ததாம் ஓட்டம்.
- குடல் கூழுக்கு அழுவுதான் கொண்டை பூவுக்கு அழுவதாம்.
- சொர்ப்பனத்தில் கண்ட அரிசி சோத்துக்கு ஆகுமா?
- நல்ல பாம்பு படம் எடுக்கலாம்; நாக்கல்லாம் பூச்சி படம் எடுக்கலாமா?
- ஆயிரம் கலம் நெல்லுக்கு ஒரு அந்துப்பூச்சி போதும்.
- ஆள் கூடுனா பாம்பு சாகுமா?
- கைய ஊனித் தான் கரணம் போட முடியும்.
- காவடிப்பாரம் சுமக்கிறவனுக்குதான் தெரியும்.
- இருப்பவனுக்குப் புளியேப்பம் இல்லாதவனுக்குப் பசியேப்பம்.
- நாலு வீட்டுல கல்யாணமாம் நாய்க்கு அங்கேயும் இங்கேயும் ஓட்டமாம்.
- பாடிப்பாடி குத்தினாலும் பதறு அரிசி ஆகுமா?
- அதிர அடிச்சா உதிர விளையும்.
- அகழியில் விழுந்த முதலைக்கு அதுவே சொர்க்கம்.
- கார்த்திகை மாசம் பிறையை கண்ட மாதிரி.
- தட்டி போட்ட ரொட்டிக்கு புரட்டி போட ஆள் இல்ல.

- ⊗ அதை விட்டாலும் கதி இல்ல. அப்பால போனாலும் விதி இல்ல.
- ⊗ அமாவாசை இருட்டில் பெருச்சாளிக்குப் போன இடமெல்லாம் வழிதான்.
- ⊗ அள்ளுறவன் பக்கத்துல இருந்தாலும் கிள்ளுறவன் பக்கத்துல இருக்கக் கூடாது.
- ⊗ குத்துக்கல்லுக்கு என்ன குளிரா? வெயிலா?

## குற்றியலுகரம் குற்றியலிகரம்

### குற்றியலுகரம்:

- ➢ குறுமை + இயல் + உகரம் = குற்றியலுகரம்.
- ➢ தனக்குரிய ஓசையிலிருந்து 'உ' என்னும் ஓசை குறைந்து ஒலிப்பது குற்றியலுகரம்.
- ➢ கு, சு, டு, து, பு, று ஆகிய ஆறு வல்லின உகரங்களும் சொல்லின் இறுதியில் வரும்போது, ஒரு மாத்திரைக்குப் பதிலாக அரைமத்திரை அளவாக ஒலிக்கும்.

- தமிழில் எழுத்துக்களை குறிப்பிடுவதற்கு கரம், கான், காரம், தேனும் ஆகிய எழுத்துக்கள் சாரியைகளைப் பயன்படுத்துகிறோம்.
- குறில் எழுத்துக்களை குறிக்கும் - கரம்
    - எ.கா- உகரம், மகரம், கரம், இகரம்.
- நெடில் எழுத்துக்களை குறிக்க - கான்
    - எ.கா- ஐகான், ஔகான்.
- குறில் நெடில் எழுத்துக்களை குறிக்க - காரம்.
    - எ.கா- மகரம் ஏகாரம் ஐகாரம் ஔகாரம் .
- ஆயுத எழுத்தை குறிக்க - கேனம்.

**முற்றியலுகரம்:**

- ❖ ஓசை குறையாமல் ஒலிப்பது முற்றியலுகரம் எனப்படும்.
- ❖ தனிக் குறிலை அடுத்து வரும் வல்லின உபகரங்கள் ஓசை குறையாமல் வரும்.
- ❖ வல்லினம் அல்லாத எழுத்தைத் தொடர்ந்து வரும் அனைத்து உகரங்களும் தனது மாத்திரை அளவில் குறையாமல் ஒலிக்கும்.

JSR IAS ACADEMY

## குற்றியலுகரத்தின் வகைகள்:

குற்றியலுகரம் தனக்கு முன் உள்ள எழுத்தைக் கொண்டு ஆறு வகையாகப் பிரிக்கப்படும்:




1. நெடில் தொடர்க் குற்றியலுகரம்
   - தனி நெடிலைத் தொடர்ந்து வரும் குற்றியலுகரம் நெடில் தொடர்க் குற்றியலுகரம்.
   - இவை ஈரெழுத்து சொற்களாக மட்டும் அமையும்

     எ.கா- பாகு, மாசு, பாடு, காது, ஆறு.
2. ஆய்தத்தொடர்க் குற்றியலுகரம்
   - ஆய்த எழுத்தை தொடர்ந்து வரும் குற்றியலுகரம்.

     எ.கா- எஃகு, அஃது.
3. உயிர்த்தொடர்க் குற்றியலுகரம்:
   - தனிநெடில் அல்லாத உயிர்மெய் எழுத்தை தொடர்ந்து வரும் குற்றியலுகரம்.

     எ.கா- அரசு, கயிறு, ஒன்பது, வரலாறு.
4. வன்தொடர்க் குற்றியலுகரம்:
   - வல்லின மெய் எழுத்துகளை தொடர்ந்து வரும் குற்றியலுகரம்.

     எ.கா- பாக்கு, பேச்சு, பாடு, பத்து, உப்பு, பற்று.
5. மென்தொடர்க் குற்றியலுகரம்:
   - மெல்லின மெய் எழுத்துக்களை தொடர்ந்து வரும் குற்றியலுகரம் .

     எ.கா- பங்கு, மஞ்சு, பந்து, பண்பு, அம்பு, கன்று.
6. இடைத்தொடர் குற்றியலுகரம்:
   - இடையின மெய் எழுத்துக்களை தொடர்ந்து வரும் குற்றியலுகரம்.

     எ.கா- எய்து, மார்பு, சால்பு, மூழ்கு.
   - வ் என்னும் எழுத்தை தொடர்ந்து வரும் குற்றியலுகர சொற்கள் இல்லை.
   - சு, டு, று ஆகியவை இறுதியாக அமையும் இடைத்தொடர்க் குற்றியலுகரச் சொற்கள் இல்லை.

JSR IAS ACADEMY

## குற்றியலிகரம்:

- குறுமை + இயல் + இகரம்.
- தன் மாத்திரை அளவில் இருந்து குறுகி ஒலிக்கும் இகரம் குற்றியலிகரம் எனலாம். இது இரண்டு இடங்களில் மட்டும் வரும்.
- **நிலை** - 1
  - குற்றியலுகரச் சொல்லைத் தொடர்ந்து யகரத்தை முதல் எழுத்தாக கொண்ட சொற்கள் வரும்போது குற்றியலுகரத்தில் உள்ள உகரம், இகரமாக மாறும். அந்த இகரம் தனக்குரிய ஒரு மாத்திரை அளவிலிருந்து அரை மாத்திரை அளவாக குறைந்து ஒலிக்கும்.
    - எ.கா- கொக்கு + யாது = கொக்கியது.
      நாடு + யாது = நாடியாது.
- **நிலை** - 2
  - மியா என்பது ஓர் அசைச்சொல் "மி" இல் உள்ள இகரம் குற்றியலிகரம் ஆகும்.
    - எ.கா- கேள் + மியா = கேண்மியா.
      செல் + மியா = சென்மியா

- குற்றியலுகரம் தற்போது உரைநடை வழக்கில் இல்லை. இலக்கியங்களில் மட்டுமே உள்ளது.

## பொருந்தாத சொற்களை எடுத்து எழுதுக:

- பசு, விடு, ஆறு, கரு - கரு
- பாக்கு, பஞ்சு, பாட்டு, பத்து - பஞ்சு
- ஆறு, மாசு, பாகு, அது - அது
- அரசு, எய்து, மூழ்கு, மார்பு - அரசு
- பண்பு, மஞ்சு, கண்டு, எ்கு - எ்கு

## கலைச்சொற்கள்:

1. ஊடகம் - Media.
2. மொழியியல் – Linguistics.
3. ஒலியியல் – Phonology.
4. இகழியல் – Journalism.
5. பருவ இதழ் – Magazine.
6. பொம்மலாட்டம் – Puppetry.
7. உரையாடல் – Dialogue.
8. எழுத்திலக்கணம் – Orthography.



JSR IAS ACADEMY

# காடு

- காட்டின் வளமே நாட்டின் வளம்.
- ஒரு நாட்டின் வளம் அந்த நாட்டின் மொத்த நிலப்பரப்பில் அமைந்துள்ள காடுகளின் அளவைப் பொருத்தே மதிப்பிடப்படும்.

*"பச்சை மயில் நடிக்கும்*
*பன்றி கிழங்கெடுக்கும்*
*நச்சர வங்கலங்கும் - கிளியே"*
- சுரதா

- சொற்பொருள்:
  - ஈன்று - தந்து
  - கொம்பு - கிளை
  - அதிமதுரம் - மிகுந்த சுவை
  - களித்திட - மகிழ்ந்திட
  - நச்சவரம் - விடமுள்ள பாம்பு.

## சுரதா:



- சுரதா இயற்பெயர் - இராஜகோபாலன்.
- பெயர்க் காரணம்: பாரதிதாசன் மீது மிகுந்த பற்று கொண்டவர் எனவே தம் பெயரை சுப்புரத்தின தாசன் என்று மாற்றிக் கொண்டார் அதன் சுருக்கமே சுரதா.
- சிறப்பு பெயர் - உவமை கவிஞர். உவமைகளை பயன்படுத்தி கவிதை எழுதுவதில் வல்லவர்.
- படைப்புகள்
  - அமுதும் தேனும்
  - தேன் மழை
  - துறைமுகம்
- இப்பாடல் தேன்மழை என்னும் நூலில் இயற்கை எழில் என்னும் பகுதியிலிருந்து தரப்பட்டுள்ளது.
- பாவகை: கிளிக்கண்ணி
- கிளியின் மொழி போன்ற இனிய சொற்களை பேசும் பெண்ணை நோக்கி கூறுவதாக இனிய சந்தத்தில் பாடப்படும் இசைப்பாடல் - கிளிக்கண்ணி.




JSR IAS ACADEMY

**காட்டை குறிக்கும் வேறுபெயர்கள்**:
கா, கால், கான், கானகம், அடவி, அரண், ஆரணி, புரவு, பொற்றை, பொழில், தில்லம், அழுவம், இயவு, பழவம், முளரி, வல்லை, விடர், வியல், வனம், முதை, மிளை, இறும்பு, சுரம், பொச்சை, பொதி, முளி, அரில், அறல், பதுக்கை, கணையம்.

*நெஞ்சில் உரமுமின்றி*
*நேர்மைத் திறமுமின்றி*
*வஞ்சனை சொல்லவாரநீ - கிளியே*
*வாய்ச்சொல்லில் வீரரடி.*
*கூட்டத்தில் கூடிநின்று*
*கூவிப் பிதற்றலன்றி*
*நாட்டத்தில் கொள்ளாரடீ! - கிளியே*
*நாளில் மறப்பாரடீ.*

- பாரதியார்

# அப்படியே நிற்கட்டும் அந்த மரம்



- நிலமடந்தைக்கு இயற்கை சூட்டிய மணி மகுடங்கள் - மரங்கள்.
- சொற்பொருள்:
    - பரவசம் - மகிழ்ச்சிப் பெருக்கு
    - துஷ்டி கேட்டல் - துக்கம் விசாரித்தல்.

**ராஜமார்த்தாண்டம்:**



- கவிஞர், இதழாளார், கவிதை திறனாய்வாளர் என பன்முகத் திறன்கள் பெற்றவர்.
- கொல்லிப்பாவை என்னும் சிற்றிதழை நடத்தியவர்.
- இவரின் தமிழ் வளர்ச்சி துறையின் பரிசு பெற்ற நூல் - ராஜமார்த்தாண்டன் கவிதைகள்.
- சிறந்த தமிழ் கவிதைகளை தொகுத்து இவர் வெளியிட்ட நூல் - கொங்குதேர் வாழ்க்கை.

*குழந்தை*
*வரைந்தது*
*பறவைகள் மட்டுமே*
*வானம்*
*தானாக உருவானது*
- கலாப்ரியா.

# விலங்குகள் உலகம்

- தமிழ்நாட்டில் புலிகள் காப்பகம் அமைந்த இடம் - களக்காடு, முண்டந்துறை.
- தமிழ்நாட்டில் இரண்டாவது மிகப்பெரிய காப்பகமாகும் (895 ச.கி.மீ).
- உலகில் இரண்டு வகையான யானைகள் உள்ளன.
- ஆசியா யானைகளில் ஆண் யானைக்கு தந்தம் உண்டு. பெண் யானைக்கு தந்தம் இல்லை.
- ஆப்பிரிக்கா யானைகளில் இரண்டுக்குமே தந்தம் உண்டு.





- யானை கூட்டத்தின் தலைமை தாங்குவது - பெண் யானை.
- மிகுந்த நினைவாற்றல், பாசம் நிறைந்த விலங்கு - யானை.
- கரடி ஓர் அனைத்துண்ணி கரடிக்கு மிகவும் பிடித்த உணவு கரையான் .
- தமிழ்நாட்டின் வனக்கல்லூரி அமைந்துள்ள இடம் மேட்டுப்பாளையம் கோவை.
- கோவையில் உள்ள தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் இளநிலை வனவியல், முதுநிலை வனவியல் ஆகிய படிப்புகள் உள்ளன. (B. Sc Forestry, M. Sc Forestry).
- காட்டின் வளத்தை குறிக்கும் குறியீடு - புலி.
- பண்புள்ள விலங்கு என அழைக்கப்படுவது - புலி.
- இந்தியாவில் ஆசிய சிங்கங்கள் காணப்படும் இடம் - கிர் சரணாலயம் - குஜராத்.



- எடை, உயரம், நீளம், பருமன், பலம், வேட்டை திறன் ஆகிய அனைத்திலும் சிங்கத்தை விட புலியே உயர்ந்தது.

JSR IAS ACADEMY

- இயற்கை விஞ்ஞானிகள் புலியையே காட்டுக்கு அரசன் என்கிறார்கள்.
- இந்தியாவில், சருகுமான், மிளாமான், வெளிமான் என பல வகையான மான்கள் உள்ளன.
- எல்லா வகை மான்களிலும் அழகில் சிறந்தவை - நம் நாட்டு புள்ளி மான்கள்.
- கோடியக்கரை, வேடந்தாங்கல், கூந்தன்குளம் போன்ற இடங்களில் பறவைகள் சரணாலயங்கள் உள்ளன.






JSR IAS ACADEMY

# இந்திய வன மகன்

## ஜாதவ் பயேங்



- **இந்திய வனமகன்** என்று அழைக்கப்படுகிறார்.
- அஸ்ஸாம் மாநில ஜோர்விராட் மாநிலத்தில் பிறந்தவர்.
- 30 ஆண்டு கடின உழைப்பால் பிரம்மபுத்ரா தீவில் செயற்கையாக ஒரு காட்டை உருவாக்கியவர்.
- பிரம்மபுத்திரா பகுதியில் சமூகக் காடு வளர்ப்புத் திட்டம் செயல்படுத்தியதில் பெரும்பங்கு வகித்தவர்.
- ஜாதவ் பயேங்கிற்கு மரம் வளர்க்க வழிகாட்டிய அசாம் வேளாண் பல்கலைக்கழக பேராசிரியர் - ஜாதுநாத்.
- மணற்பரப்பில் மூங்கிலை தவிர பிற மரங்கள் வளர வேண்டுமெனில் மண்ணின் தன்மையை மாற்ற வேண்டும்.
- யானைகள் தங்கியிருக்கும் காடுகளே வளமான காடுகளாகும்.
- காட்டின்வளம் என குறிப்பிடப்படும் விலங்கு - புலிகள்.
- ஜாதவ் பயேங் உருவாக்கிய காடு பற்றிய செய்தி வெளிவந்த இதழ் - டைம்ஸ் ஆப் இந்தியா.



- 2012 ஆம் ஆண்டு ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகம் ஜாதகருக்கு வழங்கிய பட்டம் - இந்தியா வனமகன் (Forest man of India).
- 2015 இல் இந்திய அரசு இவருக்கு வழங்கிய விருது - பத்மஸ்ரீ விருது.
- கௌகாத்தி பல்கலைக்கழகம் வழங்கிய பட்டம் - மதிப்புறு முனைவர்.



JSR IAS ACADEMY

# நால்வகைக் குறுக்கங்கள்

- தமக்குரிய கால அளவைவிட குறைந்து ஒலிக்கும் எழுத்துக்கள் - குறுக்கங்கள்.
- குறுக்கங்கள் 4 வகைப்படும்.

## ஐகாரக்குறுக்கம்:

- ஐகார எழுத்துக்கள் தனித்துவரும் இடங்களில் தனக்குரிய இரண்டு மாத்திரை அளவில் முழுமையாக ஒலிக்கும்.
- சொற்களின் முதல், இடை, இறுதி ஆகிய இடங்களில் வரும்போது தனக்குரிய இரண்டு மாத்திரை அளவில் இருந்து குறைந்து ஒலிக்கும். இவ்வாறு குறைந்து ஒலிக்கும் ஐகாரம் ஐகாரக் குறுக்கம் எனப்படும்.
- சொல்லின் முதலில் வரும் ஐகாரம்.
    - எ.கா - வையம் - ஒன்றறரை மாத்திரை அளவில் ஒலிக்கும்.
- இடை மற்றும் இறுதியில் வரும் ஐகாரம்:-
    - எ.கா - சமையல், பாலை ஒரு மாத்திரை அளவில் ஒலிக்கும்.

## ஔகாரக் குறுக்கம்:

- ஔ, வௌ என ஔகார எழுத்துக்கள் தனித்து வரும் போது தனக்குரிய இரண்டு மாத்திரை அளவில் முழுமையாக ஒலிக்கும்.
- அவையே சொல்லில் முதலில் வரும் போது தனக்குரிய இரண்டு மாத்திரை அளவில் இருந்து ஒன்றரை மாத்திரையாக குறைந்து ஒலிக்கும்.

  எ.கா- ஔவையார், வௌவால்

  இவ்வாறு குறைந்து ஒலிக்கும். ஔகார ஔகாரக் குறுக்கம் எனப்படும்.
- சொல்லில் முதலில் மட்டுமே வரும் குறுக்கம் - ஔகார குறுக்கம்.
- ஔகாரம் சொல்லில் இடையிலும், இறுதியிலும் வராது.

## மகரக் குறுக்கம்:

- னகர, ணகர மெய்எழுத்துகளான ன், ண் ஐ அடுத்துவரும் என்னும் மகர மெய்யானது தனக்குரிய அரை மாத்திரை அளவிலிருந்து குறைந்து கால் மாத்திரை அளவில் ஒலிக்கும். இவ்வாறு ஒலிப்பது மகரக் குறுக்கம்.

  எ.கா- போன்ம், மருண்ம்

- இச்சொற்களில் மகரம் மெய்யானது ன், ண் ஆகிய எழுத்துக்களை அடுத்து வருவதால் தனக்குரிய அரை மாத்திரையில் இருந்து கால் மாத்திரை அளவில் ஒலிக்கும்.
- மகர மெய்யை அடுத்து வகர எழுத்து வந்தால் 'ம்' என்னும் எழுத்து குறைந்து ஒலிக்கும்.

  எ.கா.- வலம் வந்தான்

## ஆய்தக் குறுக்கம்:

- அஃது, எஃகு ஆகிய சொற்களில் ஆயுத எழுத்து தனக்குரிய அரை மாத்திரை அளவிலிருந்து முழுமையாக ஒலிக்கும்.
- தனக்குரிய அரை மாத்திரையில் இருந்து கால் மாத்திரையாக குறைந்து ஒலிக்கும் ஆய்தம் ஆய்த குறுக்கம் எனப்படும்.

  முன் + தீது = முஃடீது

  கல் + தீது = கஃறீது.

### கலைச்சொல் அறிவோம்.

- ✱ தீவு – Island.
- ✱ உவமை -Parable
- ✱ இயற்கை வளம் -Natural Resource
- ✱ காடு -Jungle
- ✱ வன விலங்குகள் -Wild Animals
- ✱ வனவியல் – Forestry
- ✱ வனப் பாதுகாவலர் -Forest Conservator
- ✱ பல்லுயிர் மண்டலம் -Bio Diversity

JSR IAS ACADEMY

# திருக்குறள்

## அழுக்காறாமை

**ஒழுக்காறாக் கொள்க ஒருவன்தன் நெஞ்சத்து**
**அழுக்காறு இலாத இயல்பு.**

பொருள் :ஒருவர் தன் நெஞ்சில் பொறாமையில்லாத குணத்தையே ஒழுக்க நெறியாகக் கொண்டு வாழ வேண்டும்.

**அவ்விய நெஞ்சத்தான் ஆக்கமும் செவ்வியான்**
**கேடும் நினைக்கப் படும்.**

பொருள் :பொறாமை கொண்டவருடைய செல்வமும், பொறாமை இல்லாதவருடைய வறுமையும் சான்றோரால் ஆராயப்படும்.

## புறங்கூறாமை

**கண்நின்று கண்அறச் சொல்லினும் சொல்லற்க முன்இன்று**
**பின்நோக்காச் சொல்.**

பொருள் :ஒருவருக்கு நேர்நின்று கடுமையான சொற்களைச் சொன்னாலும் சொல்லலாம். ஆனால், அவர் இல்லாதபோது புறங்கூறுதல் கூடாது.

**ஏதிலார் குற்றம்போல் தம்குற்றம் காண்கிற்பின்**
**தீதுண்டோ மன்னும் உயிர்க்கு.**

பொருள் :பிறருடைய குற்றத்தைக் காண்பது போல், தன்னுடைய குற்றத்தையும் காண்பவருடைய வாழ்வில் துன்பம் இல்லை.

## அருளுடைமை

**அருட்செல்வம் செல்வத்துள் செல்வம் பொருட்செல்வம்**
**பூரியார் கண்ணும் உள.**

பொருள்அருளாகிய செல்வமே செல்வங்களுள் சிறந்த செல்வமாகும். பொருட்செல்வம் இழிந்தவரிடத்திலும் உள்ளது.

**வலியார்முன் தன்னை நினைக்கதான் தன்னின்**
**மெலியார்மேல் செல்லும் இடத்து.**

பொருள்: ஒருவர் தன்னைவிட மெலிந்தவரை துன்புறுத்தும்போது, தன்னை விட வலிமையுடையவரின் முன் தான் அஞ்சி நிற்கும் நிலையை எண்ணிப் பார்த்தல் வேண்டும்.



JSR IAS ACADEMY

## வாய்மை

**வாய்மை எனப்படுவது யாதெனின் யாதொன்றும்**
**தீமை இலாத சொலல்*.**

பொருள் :வாய்மை எனப்படுவது மற்றவர்க்கு ஒரு தீங்கும் தராத சொற்களைச் சொல்லுதல் ஆகும்.

**தன்நெஞ்சு அறிவது பொய்யற்க பொய்த்தபின்**
**தன்நெஞ்சே தன்னைச் சுடும்.**

பொருள்: ஒருவர் தன் நெஞ்சறிய பொய் சொல்லக்கூடாது. அவ்வாறு கூறினால் அவர் நெஞ்சமே அவனை வருத்தும்.

**உள்ளத்தால் பொய்யாது ஒழுகின் உலகத்தார்**
**உள்ளத்துள் எல்லாம் உளன்*.**

பொருள்: உள்ளத்தில் பொய் இல்லாமல் வாழ்பவர், உலகத்தார் உள்ளங்களில் எல்லாம் இருப்பவர் ஆவார்.

## இறைமாட்சி

**இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த**
**வகுத்தலும் வல்லது அரசு.**

பொருள்: பொருள் வரும் வழிகளை அறிதலும், அவ்வழிகளில் பொருள்களைச் சேர்த்தலும், சேர்த்த பொருளைப் பாதுகாத்தலும், காத்த பொருளைப் பயனுள்ள வகையில் திட்டமிட்டுச் செலவிடுதலும் சிறந்த அரசின் செயலாகும்.

JSR IAS ACADEMY

# புலி தங்கிய குகை

*"புலி சேர்ந்து போகிய கல் அளை போல*
*ஈன்று வயிறோ இதுவே*
*தோன்றுவன் மாதோ போர்களைத் தானே*
- காவற்பெண்டு (புறநானூறு)



**சொல்லும் பொருளும்**

- சிற்றில் - சிறு வீடு
- கல்அளை - கற்குகை
- யாண்டு - எங்கே
- ஈன்று வயிறு - பெற்றெடுத்த வயிறு

- ஆசிரியர் - காவற்பெண்டு
- சோழ மன்னன் போரவைக் கோப்பெரு நற்கிள்ளியின் செவிலித்தாய்.
- கல்வியில் தேர்ச்சியும் கவிபாடும் ஆற்றலும் மிக்கவர்.
- சங்ககால மக்களின் வீரத்தை கருப்பொருளாக கொண்டு பாடல் பாடியவர்.
- இவர் பாடிய ஒரே ஒரு பாடல் புறநானூற்றில் இடம் பெற்றுள்ளது.
- புறநானூறு எட்டுத்தொகை நூல்களில் ஒன்று.
- பண்டைய தமிழ் மக்களின் வாழ்க்கை முறை, நாகரிகம், பண்பாடு, வீரம் முதலியவற்றை வெளிப்படுத்தும் நூல் - புறநானூறு.

JSR IAS ACADEMY

# பாஞ்சை வளம்

*சுத்தவீர சூரன் கட்டபொம்மு துரை*
*துலங்கும் பாஞ்சை வளங்கள் சொல்வேன்*

*கறந்த பாலையுங் காகங் குடியாது - எங்கள்*
*கட்ட பொம்மு துரை பேரு சொன்னால்.*
- நா.வனமாமலை

- தமிழ் நாட்டுப்புறவியலின் தந்தை - நா.வானமாலை
- குறையில்லாத வீரனான கட்டபொம்மன் ஆட்சி செய்த பாளையம் - பாஞ்சாலங்குறிச்சி
- பாஞ்சாலங் குறிச்சியின் வளங்களை பாடலாக தொகுத்து வீரபாண்டிய கட்டபொம்மு எனும் கதைபாடலாக வெளியிட்டவர் - நா.வானமாலை
- பாஞ்சாலங்குறிச்சியில் முயல்கள் தன்னை வேட்டையாட வரும் நாயை விரட்டுவதாகவும், பசுவும், புலியும் நீர் நிலையில் ஒன்றாக நீர் அருந்துவதாகவும் கவிஞர் கூறுகிறார்.

## பொருத்துக

- பொக்கிஷம் – செல்வம்.
- சாஸ்தி – மிகுதி.
- விஸ்தாரம் – பெரும் பரப்பு.
- சிங்காரம் – அழகு.

# தேசிய காத்த செம்மல்

## பசும்பொன் உ.முத்துராமலிங்கத் தேவர்



- தேசியம், உடல், தெய்வீகம் உயிர் எனக் கருதி
- மக்கள் தொண்டு செய்தவர் - பசும்பொன் முத்துராமலிங்க தேவர்.
- வீரப்பேச்சால் எத்தனையோ தியாகிகளையும், விவேகப் பேச்சால் எத்தனையோ அறிவாளிகளையும் உருவாக்கியவர் - பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர்
- சுத்தத் தியாகி என்று தந்தை பெரியாரால் பாராட்டப்பட்டவர்.
- பிறந்த ஆண்டு - 30.10.1908
- பிறந்த ஊர் - பசும்பொன்
- பெற்றோர் - உக்கிர பாண்டிய தேவர் - இந்திராணி அம்மையார்
- இளமையிலே அன்னையை இழந்ததால் இஸ்லாமிய தாயார் பாலூட்டி வளர்க்கப் பெற்றவர்.

## கல்வி:

- தொடக்கக்கல்வி - கமுதி
- உயர்நிலைக் கல்வி - மதுரை பசுமலைப் பள்ளி, ராமநாதபுரம்
- இராமநாதபுரத்தில் பிளேக் நோய் பரவியதால் படிப்பு பாதியில் நின்றது.
- தமிழ், ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளிலும் சொற்பொழிவாற்றும் திறன் பெற்று இருந்தார்.
- சிலம்பம், குதிரை ஏற்றம், துப்பாக்கி சுடுதல், சோதிடம், மருத்துவம் போன்ற பல துறைகளிலும் ஆற்றல் உடையவர்.
- இளமையிலேயே அரசியல் ஆர்வம் கொண்டவர்.
- வட இந்தியாவில் வாய் பூட்டு சட்டத்தின் மூலம் மேடைகளில் பேச தடை விதிக்கப்பட்டவர் - பாலகங்காதர திலகர்
- தென்னிந்தியாவில் வாய்ப்பூட்டு சட்டத்தின் மூலம் மேடைகள் பேச தடை விகித்தப்பட்டவர் - முத்துராமலிங்க தேவர்

## புகழ்ச்சிகள்:

- முத்துராமலிங்க தேவரை "தென்னாட்டு சிங்கம்" என்று புகழ்வது சாலச் சிறந்தது எனக் கூறியவர் - அறிஞர் அண்ணா

- அவர் பேசத் தொடங்கியதும் அவரது பேச்சு சிங்கத்தின் முழக்கம் போல இருந்தது எனக் கூறியவர் - அறிஞர் அண்ணா
- முத்துராமலிங்கரின் பேச்சு உள்ளத்தில் இருந்து வெளிப்படுகிறது. உதடுகளில் இருந்து அல்ல. உள்ளத்தால் எதிலும் பற்றற்று உண்மை எனப்படுவதை மறைக்காமல் அப்படியே பேசிவிடுவது அவரின் வழக்கம் என்ற புகழ்ந்தவர் - மூதறிஞர் இராஜாஜி
- முத்துராமலிங்கரை *'தேசியம் காத்த செம்மல்'* என பாராட்டியவர் - திரு.வி.க.
- வங்க சிங்கம் - நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் {வங்கச் சிங்கம் முத்துராமலிங்கர் தனது உரையை "**சாயல்குடி**" என்னும் ஊரில் விவேகானந்தரின் பெருமை என்னும் தலைப்பில் மூன்று மணி நேரம் உரையாற்றினார்.
- "இது போன்ற ஒரு பேச்சை இதுவரை நான் கேட்டதில்லை" முத்துராமலிங்கரின் வீரம் மிக்க பேச்சு விடுதலை போருக்கு மிகவும் உதவும் எனக் கூறியவர் - காமராஜர்

## அரசியல்:

- முத்துராமலிங்கரின் அரசியல் குரு - நேதாஜி
- நேதாஜி முத்துராமலிங்கரின் அழைப்பை ஏற்று மதுரைக்கு வருகை தந்த நாள் - செப்டம்பர் 6, 1939
- விடுதலைக்கு பின் முத்துராமலிங்க தேவர் தொடங்கிய வார இதழ் - நேதாஜி
- இந்திய தேசிய ராணுவத்தின் ஏராளமான தமிழர்கள் இணைய காரணமானவர் - முத்துராமலிங்க தேவர்

## தேர்தல் வெற்றி:

- பாராளுமன்றத்தில் இவர் ஆங்கிலத்தில் பேசிய பேச்சு வெள்ளையர் காலத்தில் விட்டல் பாய், வல்லபாய் படேல் போன்ற மேதைகள் பேசிய பேச்சைப் போல இருந்ததாக வட இந்திய இதழ்கள் பாராட்டின.
- 1937 ராமநாதபுரம் அரசர் **சண்முக ராஜேஸ்வர சேதுபதியை** எதிர்த்து வெற்றி பெற்றார்.
- அப்போது லண்டனில் பாரிஸ்டர் படித்து வந்த தோழர் கே.டி.கே.தங்கமணி இந்திய தேர்தலில் ராமநாதபுரம் மன்னரை எதிர்த்து போட்டியிட்ட தேவரின் வெற்றியையும், பொப்புலி அரசரை எதிர்த்துப் போட்டியிட்ட வி.வி.கிரியின் வெற்றியையும் இந்திய மாணவர்கள் பெரிதும் எதிர்பார்த்து இருந்ததாக கூறினார்.



JSR IAS ACADEMY

- 1946-இல் சட்டமன்ற உறுப்பினராக போட்டியின்றி தேர்வு செய்யப்பட்டார்.
- 1952, 1957-ல் நடைபெற்ற சட்டமன்ற, நாடாளுமன்ற தேர்தல் இரண்டிலும் வெற்றி.
- 1962-ல் பாராளுமன்ற தேர்தலில் உடல் நல குறைவினால் பரப்புரை செய்ய இயலாத போதும் வெற்றி பெற்றார்.

## போராட்டங்கள்:

- ஆங்கில ஆட்சியில் மக்களை ஒடுக்குவதற்காக கொண்டு வரப்பட்ட சட்டம் - குற்றப்பரம்பரை சட்டம்
- பிறப்பாலேயே ஒருவரை குற்றவாளியாக கருதும் இச்சட்டத்தை எதிர்த்து போராடியவர் - முத்துராமலிங்கத் தேவர்
- 1934 மே 12, 13 தேதியில் குற்ற பரம்பரைச் சட்ட எதிர்ப்பு மாநாட்டை நடத்திய இடம் - கமுதி
- குற்றப்பரம்பரை சட்டம் நீக்கப்பட்ட ஆண்டு - 1948
- 1939 ஜூலை 8-ல் மதுரை **வைத்தியநாத ஐயருடன்** சேர்ந்து மதுரை மீனாட்சி அம்மன் ஆலய நுழைவு போராட்டத்தை வெற்றி பெற செய்தார்.

## விவசாயம்:

- **ஜமீன் விவசாயிகள் சங்கத்தை** ஏற்படுத்தி விவசாயிகளின் முன்னேற்றத்திற்கு பாடுபட்டார்.
- உழுபவர்களுக்கு நிலம் என்று கருதி 31 சிற்றூர்களில் இருந்த தமது விலை நிலத்தை ஒடுக்கப்பட்ட மக்களுக்கு அளித்தார்.
- விவசாயிகளின் உற்பத்தி பொருட்களுக்கு சரியான விலை கிடைக்க ஏற்படுத்தியது - **பாரத மாதா கூட்டுறவு பண்டக் சாலை.**

## தொழிலாளர் நலன்:

- 1939 காலகட்டத்தில் மதுரையில் 23 தொழிலாளர் சங்கத்தின் தலைவராக திகழ்ந்தார்.
- மதுரை நூற்பு ஆலை தொழிலாளர் போராட்டத்தை ஜீவானந்ததுடன் இணைந்து 1938இல் மேற்கொண்டார்.
- உழவர்களின் நலன் காக்க மிகப்பெரிய அளவிலான மாநாடு நடைபெற்ற இடம் - ராஜபாளையம்
- பெண் தொழிலாளர்களுக்கு மகப்பேறு காலத்தில் ஊதியத்துடன் கூடிய விடுப்பு வேண்டும் என போராடியவர்.



JSR IAS ACADEMY

## சுதந்திர போராட்டம்:

- சுதந்திர போராட்டத்தில் தீவிரமாக ஈடுபட்ட முத்துராமலிங்கத் தேவர் சிறைவைக்கப்பட்ட இடங்கள் - அலிப்பூர், அமராவதி, தாமோ, கல்கத்தா, சென்னை, வேலூர்.
- இரண்டாம் உலகப்போர் காலத்தில் இவர் சிறை வைக்கப்பட்ட இடம் - தாமோ (மத்திய பிரதேசம்)
- 1936, 1955 என இரண்டு முறை பர்மா சென்றார். இவர் பர்மா சென்றபோது பெண்கள் தங்கள் கூந்தலை நடைபாதையாக விரித்து புத்த பிட்சுகளில் உயர்த்தவர்களுக்கு அளிக்கப்படும் வரவேற்பு பெண்களை இழிவு படுத்துவதாக உள்ளது எனக் கூறியவர்.
- பொது தொண்டுக்கு இடையூறாக இருக்கும் என்பதால் திருமணத்தை தவிர்த்தார்.

## சிறப்பு பெயர்கள்:

1. தேசிய காத்த செம்மல்
2. வித்யா பாஸ்கர்
3. பிரணவ கேசரி
4. சன்மார்க்க சண்டமாருதம்
5. இந்து புத்த சமய மேதை
6. விவேகானந்தரின் தூதர்
7. நேதாஜியின் தளபதி
8. சத்திய சீலர்
9. முருக பக்தர்
10. ஆன்மீக புத்திரர்
11. தென்பாண்டி சீமையின் முடிசூடா மன்னன்
12. நீதி வழுவா நேர்மையாளர்
13. புலமையில் கபிலர்
14. வலிமையில் கரிகாலன்
15. கொடையில் கர்ணன்
16. பக்தியில் பரமஹம்சர்
17. இந்தியாவின் நன்மகனாக விளங்கியவர்



- முத்துராமலிங்க தேவர் இம்மண்ணுலகில் வாழ்ந்த நாட்கள் - 20,075 நாட்கள்
- சிறையில் கழித்த நாட்கள் - 4000

- தன் வாழ்நாளில் 5-ல் 1 பங்கினை சிறையில் கழித்துள்ளார்.
- முத்துராமலிங்க தேவரின் நினைவிடம் உள்ள இடம் - பசும்பொன்
- அவர் நினைவிடத்தில் அவர் தோன்றி மறைந்த அக்டோபர் 30 அன்று தமிழக அரசின் சார்பில் அரசு விழா எடுக்கப்படுகிறது.
- தமிழக சட்டமன்றத்தில் அவரது திருவுருவப்படம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.
- அரசு சார்பாக சிலை அமைக்கப்பட்டுள்ள இடம் - சென்னை.
- இந்திய நாடாளுமன்றம் வளாகத்திலும் சிலை வைக்கப்பட்டுள்ளது.
- இந்திய அரசால் தபால் தலை வெளியிடப்பட்ட ஆண்டு - 1955.
- இறப்பு - 1963 அக்டோபர் 30

## கப்பலோட்டிய தமிழன்

- தென்னாட்டில் உள்ள தூத்துக்குடி, ஒரு துறைமுக நகரமாகும்.
- முத்துக்குளித்தல் சிறப்பாக நடைபெறும் இடம் - தூத்துக்குடி துறைமுகம்
- கொற்கை பெருந்துறையில் வழித் தோன்றல் - தூத்துக்குடி
- பாண்டியர்களின் துறைமுகமான மீன்கொடி பறந்த துறைமுகம் - கொற்கை
- தூத்துக்குடியில் 1906-ல் சுதேசிநிராவி கப்பல் கழகத்தை தோற்றுவித்தவர் - வ.உ.சி.
- இவர் அக்கம்பெனியின் செயலாளராக பணியாற்றினார்.
- அக்கம்பெனியின் தலைவர் - பாண்டித்துரையார்.
- மதுரையில் நான்காம் தமிழ்ச்சங்கம் அமைத்தவர் - பாண்டித்துரையார்.
- வந்தே மாதரம் என்ற வாசகம் பிறந்த இடம் - வங்க நாடு
- சுதந்திரம் எனது பிறப்புரிமை; அதனை அடைந்தே தீருவேன் என்று வடநாட்டில் முழக்கமிட்டவர் - பாலகங்காதர திலகர்
- வந்தே மாதரம் என்போம் எங்கள் மாநிலத் தாயை வணங்குதும் என்போம் என்றவர் - பாரதியார்
- வசையொழிய வாழ்வாரே வாழ்வார் என்பது - வள்ளுவர் வாய்மொழி
- வெள்ளையர் கோர்ட்டில் இரட்டை தீவாந்தர தண்டனை பெற்றவர் - வ.உ.சி
- தண்டனையாக கோவை (ம) கண்ணனூர் சிறையில் செக்கு இழுத்தார்.
- சிறைச்சாலையை தவச்சாலையாக கருதியவர் - வ.உ.சி

JSR IAS ACADEMY

- "சிறைச்சாலையில் செக்கிழுத்த துயரத்தை மாற்றியது என் செந்தமிழ்" "கைத்தோல் உரிய கடும் பணி புரிந்த போது என் கண்ணீரை மாற்றியது கன்னித்தமிழ் - வ.உ.சி
- தொல்காப்பியத்தை படித்துப் படித்து என் தொல்லையெல்லாம் மறந்தேன். இன்னிலையைக் கற்று என் இன்னல்களை வென்றேன் - வ.உ.சி
- ஆங்கில மொழியில் ஆலன் இயற்றிய நூல் ஒன்றை "**மனம் போல் வாழ்வு**" என்று தமிழில் மொழியாக்கம் செய்தவர் - வ.உ.சி
- உயர்ந்த நூல்களில் கண்ட உண்மைகளை தொகுத்து வ.உ.சி இயற்றிய நூல்கள் - மெய்யறிவு, மெய்யறம்.
- சிதம்பரனாரின் பிரசங்கத்தையும், பாரதியாரின் பாட்டையும் கேட்டால் செத்த பிணம் உயிர் பெறும், புரட்சி ஓங்கும், அடிமைப்பட்ட நாடு ஐந்தே நிமிடத்தில் விடுதலை பெறும் என்று கூறியவர் - நீதிபதி பின்ஹே
- வ.உ.சி-க்கு இரட்டை வாழ்நாள் தண்டனை வழங்கிய நீதிபதி - நீதிபதி பின்ஹே
- "பாயக் காண்பது சுதந்திர வெள்ளம்
  பணியக் காண்பது வெள்ளையர் உள்ளம்"
- என்று நாம் பாடும் நாள் எந்நாளோ - வ.உ.சி

## வ.உ.சி:



- பிறப்பு - ஒட்டப்பிடாரம் (தூத்துக்குடி) 1872
- பெற்றோர் - உலகநாதன் - பரமாயி அம்மாள்
- இவர் மிகச்சிறந்த வழக்கறிஞர்.
- இந்திய தேசிய காங்கிரசில் இணைந்த ஆண்டு - 1905
- தூத்துக்குடி மற்றும் கொழும்புவுக்கும் (இலங்கை) கப்பல் போக்குவரத்தை நடத்தியவர் - வ.உ.சி
- திருநெல்வேலி கோரல் மில்ஸ் தொழிலாளர்களுக்கு ஆதரவாக போராடினார்.
- தூத்துக்குடி துறைமுகம் எவ்வாறு அழைக்கப்படுகிறது - வ.உ.சி துறைமுகம்
- திருநெல்வேலியையும், பாளையங்கோட்டையையும் இணைக்கும் பாலம் - வ.உ.சி பாலம்
- மறைவு - 1936, 18 நவம்பர்

## ரா.பி.சேதுப்பிள்ளை:



- சொல்லின் செல்வர் என்று அழைக்கப்படுபவர்.
- இவர் ஒரு தமிழ் அறிஞர், வழக்குரைஞர், மேடைப் பேச்சாளர் என பன்முகத் தன்மை கொண்டவர்.
- செய்யுளுக்கே உரிய எதுகை, மோனை என்பனவற்றை உரைநடையில் கொண்டு வந்தார்,
- சாகித்ய அகாடமி விருது பெற்ற முதல் நூல் - தமிழின்பம் ரா.பி.சேதுப்பிள்ளை

### பிற நூல்கள்:

1. ஆற்றங்கரையினிலே
2. கடற்கரையினிலே (பாடப்பகுதி)
3. தமிழ் விருந்து
4. தமிழகம் - ஊரும் பேரும்
5. மேடைப்பேச்சு

## வழக்கு

- எழுத்திலும் பேச்சிலும் சொற்களைப் பயன்படுத்தும் முறை - வழக்கு
- நம் முன்னோர்கள் எந்தெந்த சொற்களை என்னென்ன பொருளில் பயன்படுத்தினார்களோ அச்சொற்களை அவ்வாறே பயன்படுத்துவது - வழக்கு
- வழக்கு இரண்டு வகைப்படும்
  - இயல்பு வழக்கு
  - தகுதி வழக்கு
- ஒரு பொருளை அதற்கே உரிய இயல்பான சொற்களை குறிப்பிடுவது - இயல்பு வழக்கு

இயல்பு வழக்கு →
- இலக்கண முடையது.
- இலக்கணபோலி
- மரூஉ

J S R I A S A C A D E M Y

இயல்பு வழக்கு **மூன்று** வகைப்படும்

1. **இலக்கண முடையது:**

இலக்கண நெறி மாறாமல் முறையாக அமைந்த சொல் இலக்கண முடையது.

- தமக்குரிய பொருளில் எவ்வகை எவ்வகை மாறுபாடும் இயல்பாக தரக்கூடியது

எ.கா : நிலம், மரம், வான், எழுது

2. **இலக்கணப்போலி:**

இலக்கண முறைப்படி அமையாவிட்டாலும் இலக்கமுடையவை போலவே ஏற்று கொள்ளப்படும் சொற்கள் - இலக்கணப்போலி

- இலக்கணபோலி என்பது பெரும்பாலும் சொற்களின் முன்பின் பகுதிகள் இடம்மாறி வருவதையே குறிக்கும். எனவே இதனை முன்பின்னாக தொக்க போலி என்பர்.

3. **மரூஉ:**

இலக்கண நெறியிலிருந்து பிறழ்ந்து சிதைந்து வழங்கும் சொற்கள் - மரூஉ

எ.கா.: தஞ்சாவூர் - தஞ்சை, திருநெல்வேலி - நெல்லை.
கோவை, குடந்தை, எந்தை, சோணாடு.

- வாயில் என்னும் சொல்லைப் பேச்சு வழக்கில் வாசல் என்பது மரூஉ ஆகும்.

## தகுதி வழக்கு

ஏதேனும் ஒரு காரணத்தால் பிறரிடம் சொல்ல தகுதியற்ற சொற்களைத் தகுதியான வேறு சொற்களால் குறிப்பிடுவது - தகுதி வழக்கு.

தகுதி வழக்கு மூன்று வகைப்படும்.

1. இடக்கரடக்கல்

பிறரிடம் வெளிப்படையாக சொல்லத் தகாத சொற்களை தகுதியுடைய வேறு சொற்களால் கூறுவது - இடக்கரடக்கர்

i) கால்கழுவி வந்தான்
ii) குழந்தை வெளியே போய்விட்டது
iii) ஒன்றுக்கு போய் வந்தேன்

2. மங்கலம்

மங்கலம் இல்லாத அமங்கலமான சொற்களை மங்கலமான வேறு சொற்களால் குறிப்பதை மங்கலம் என்பர்

எ.கா. : ஓலை - திருமுகம்
கருப்பு ஆடு - வெள்ளாடு,
விளக்கை அணை - விளக்கை குளிர வை
சுடுகாடு - நன்காடு
செத்தார் - துஞ்சினார் (இயற்கை எய்தினார்)

3. குழூஉக்குறி

ஒரு குழுவினர் ஒரு பொருள் அல்லது செயலைக் குறிக்க தமக்குள் பயன்படுத்திக் கொள்ளும் சொற்கள் குழூஉக்குறி

எ.கா. : பொற்கொல்லர், பொன்னைப் "பறி" என்பர்
ஆடையை "காரை" என்பது (யானைப்பாகர்) பயன்படுத்துவது.

## போலி

சொல்லின் முதலிலோ, இடையிலோ, இறுதியிலே இயல்பாக இருக்க வேண்டிய ஓர் எழுத்திற்கு பதிலாக வேறு ஓர் எழுத்து இடம் பெற்று அதே பொருளை தருவது - போலி

- போலி என்னும் சொல் போல இருத்தல் என்பதிலிருந்து தோன்றியது.
- போலி மூன்று வகைப்படும்.

1. முதற்போலி

சொல்லின் முதலில் இருக்க வேண்டிய எழுத்துக்கு பதிலாக வேறு ஓர் எழுத்து அமைந்து அதே பொருளைத் தருவது - முதற்போலி

எ.கா.: i) பசல் - பைசல்
ii) மஞ்சு - மைஞ்சு
iii) மயல் - மையல்

2. இடைப்போலி

சொல்லின் இடையில் உள்ள எழுத்து மாறினாலும் அதே பொருளைத் தருவது - இடைப்போலி

எ.கா.: i) அமச்சு - அமைச்சு
ii) இலஞ்சி - இலைஞ்சி
iii) அரயர் - அரையர்



JSR IAS ACADEMY

3. கடைப்போலி

சொல்லின் இறுதியில் உள்ள எழுத்து மாறினாலும் அதே பொருளைத் தருவது - கடைப்போலி

எ.கா.:i) அகம் - அகன்

ii) பந்தல் - பந்தர்

iii) நிலம் - நிலன்

iv) சாம்பல் - சாம்பர்

v) முகம் - முகன்

- அஃறிணைப் பெயர்களின் இறுதியில் நிற்கும் மகர எழுத்திற்கு பதிலாக னகரம் கடைப் போலியாக வரும்.
- லகர எழுத்திற்கு பதிலாக ரகரம் வரும்.

## முற்றுப் போலி:

மூவகைப் போலிகள் மட்டுமல்லாமல் வேறு வகை போலியும் உண்டு.

- முற்றுப்போலி என்பது சொல்லில் இயல்பாக அமைந்த எழுத்துக்களுக்கு பதிலாக அனைத்து எழுத்துகளும் மாறி அதே பொருளைத் தருவது.

எ.கா.: ஐந்து - அஞ்சு.

### பொருத்துக:

- பந்தர் - கடைப்போலி..
- மைஞ்சு - முதற்போலி.
- அஞ்சு - முற்றுப்போலி.
- அரையர் - இடைப்போலி.

### தொடரை அறிதல்:

ஒரு தொடரில் மூன்று பகுதிகள் இடம்பெறும். அவை

1. எழுவாய்
2. பயனிலை
3. செயப்படுபொருள்.

### எழுவாய்:

ஒரு தொடரில் யார்? எது? எவை? என்னும் வினாக்களுக்கு விடையாக அமைவது எழுவாய்.

எ.கா. நீலன் பாடத்தைப் படித்தான் - நீலன்

பாரி யார் - பாரி

புலி ஒரு விலங்கு - புலி

### பயனிலை:

ஒரு தொடரை வினை, வினா, பெயர் ஆகியவற்றுள் ஏதேனும் ஒன்றைக் கொண்டு முடித்து வைப்பது பயனிலை.



JSR IAS ACADEMY

எ.கா. கரிகாலன் கல்லணையைக் கட்டினான் - கட்டினான்
கரிகாலன் யார்? - யார்
கரிகாலன் ஒரு மன்னன - மன்னன்.

**செயப்படுபொருள்:**

யாரை, எதை, எவற்றை என்னும் வினாக்களுக்கு விடையாக வருவது செயப்படுபொருள்.

எ.கா. நான் கவிதையைப் படித்தேன் - கவிதை
என் புத்தகத்தை எடுத்தது யார்? - புத்தகம்
நெல்லிக்கனியைத் தந்தவர் அதியமான் - நெல்லிக்கனி

**கலைச்சொல் அறிவோம்.**

* கதைப்பாடல் – Ballad
* பேச்சாற்றல் -Elocution
* துணிவு -Courage
* ஒற்றுமை -Unity
* தியாகம் -Sacrifice
* முழக்கம் -Slogan
* அரசியல் மேதை -Political Genius
* சமத்துவம் -Equality

## வினா - விடை

- நெறி என்னும் சொல்லின் பொருள் வழி.
- குரலாகும் என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது
  - குரல் + ஆகும்
- வான் + ஒலி என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் வானொலி.

## வினா - விடை

- மொழியின் முதல் நிலை பேசுதல், **கேட்டல்** ஆகியனவாகும்.
- ஒலியின் வரிவடிவம் **எழுத்து** ஆகும்.
- தமிழின் கிளை மொழிகளில் ஒன்று **தெலுங்கு**.
- பேச்சுமொழியை **உலக** வழக்கு என்றும் கூறுவர்.

## வினா - விடை

- வாழை, கன்றை **ஈன்றது**.
- ‘காடெல்லாம்’ என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது **காடு + எல்லாம்.**
- ‘கிழங்கு+எடுக்கும்’ என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் **கிழங்கெடுக்கும்.**

## வினா - விடை

- நாவற்பழத்திற்கு உவமையாகக் கூறப்படுவது - கோலிக்குண்டு.
- ‘சுட்ட பழங்கள்’ என்று குறிப்பிடப்படுபவை - ஒட்டிய பழங்கள்.
- ‘பெயரறியா’ என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது பெயர்+அறியா
- ‘மனமில்லை’ என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது மனம்+இல்லை.
- நேற்று+இரவு என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் நேற்றிரவு.

## வினா - விடை

- ஆசிய யானைகளில் ஆண் - பெண் யானைகளை வேறுபடுத்துவது - தந்தம்.
- தமிழகத்தில் புலிகள் காப்பகம் அமைந்துள்ள இடம் - முண்டந்துறை.
- ‘காட்டாறு’ என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது - காடு + ஆறு.



JSR IAS ACADEMY

- 'அனைத்துண்ணி' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது - அனைத்து + உண்ணி.
- 'நேரம் + ஆகி' என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் - நேரமாகி.
- 'வேட்டை + ஆடிய' என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் - வேட்டையாடிய

## வினா - விடை

- 'வேட்கை' என்னும் சொல்லில் ஐகாரக் குறுக்கம் பெறும் மாத்திரை அளவு - **ஒன்று**.
- மகரக் குறுக்கம் இடம்பெறாத சொல் **பணம்** கிடைத்தது.
- சொல்லின் முதலில் மட்டுமே இடம் பெறுவது **ஔகாரக் குறுக்கம்**.

## வினா - விடை

- வாய்மை எனபபைடுவது - **தீங்கு தராத சொற்களை பேசுதல்**.
- **பொறாமை உள்ளவன்** செல்வம் சான்றோர்களால் ஆராயப்படும்.
- பொருட்செல்வம்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது - **பொருள் + செல்வம்.**
- 'யாதெனின்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது - **யாது +எனின்.**
- தன்+நெஞ்சு எனபைனச் சேரத்தெழுக் கிடைக்கும் சொல் - **தன்னெஞ்சு.**
- தீது + உண்டோ என்பதனைச் சேரத்தெழுக் கிடைக்கும் சொல் - **தீதுண்டோ**

## வினா - விடை

- யாண்டு என்னும் சொல்லின் பொருள் - **எங்கு.**
- யாண்டுளனோ? என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது - **யாண்டு + உளனோ.**
- கல் + அளை என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் - **கல்லளை.**

## வினா - விடை

- **ஊர்வலத்தின் முன்னால் வானரம் அசைந்து வந்தது.**
- **பாஞ்சாலங்குறிச்சியில் முயல் நாயை விரட்டிடும்.**



JSR IAS ACADEMY

- மெத்தை வீடு என்று குறிப்பிடப்படுவது மாடி வீடு.
- 'பூட்டுங்கதவுகள்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது பூட்டும் + கதவுகள்.
- 'தோரணமேடை' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது தோரணம் + மேடை.
- வாசல் + அலங்காரம் என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் வாசலலங்காரம்.

## வினா - விடை

- முத்துராமலிங்கத்தேவர் முதன்முதலில் உரையாற்றிய இடம் சாயல்குடி.
- முத்துராமலிங்கத்தேவர் நடத்திய இதழின் பெயர் நேதாஜி
- தேசியம் காத்த செம்மல் எனப் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவரைப் பாராட்டியவர் திரு.வி.க.